அண்மையில் அமைச்சர் அவர்கள் இந்த சபையில் கூறும்போது, ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எப்பொழுது ஏற்படுத்தப்படும்? அதற்கான நடவடிக்கை என்ன நிலையில் இருக்கிறது ? அது பெரிய அளவில் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

THE HON. THIRU S.J. SADIQ PASHA : The district-wise registered area under rubber and the number of units in Tamil Nadu at the end of 1972-73 are as follows :

Name of district.	*Area in hectares.*
Kanyakumari district (Thovalai, Kalkulam and Vilavankode).	10,337

In other districts—Madurai, The Nilgiris, Coimbatore, Salem and Tirunelveli districts—Total 10,979 hectares.

இந்த விவரங்கள் இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியாகும் ரப்பரை வைத்து ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு ஒரு பரிந்துரை வந்ததே, அது சம்பந்தமாக ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அந்தத் தொழிற்சாலை கட்ட எங்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற் கான குறிப்பு இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, நம் மாநிலத்தில் விளைகின்ற ரப்பர் நமது மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கச்சா ரப்பராகக் கொடுக்கப்படுகின்றதா ? வேறு மாநிலங்களிலுள்ள இரப்பர் டயர் தொழிற் சாலைக்குக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டில் 5 சதவிகிதம் தான் உற்பத்தி ஆகிறது.

Out of the total production, 94 per cent is contributed by Kerala and Tamil Nadu's share is approximately 5 per cent. Only in the Kanyakumari district, rubber is cultivated more.

திரு. என். கே பழனிச்சாமி : தலைவரவர்களே, பெருவாரியான உற்பத்தி ஆகக்கூடிய இரப்பர்—ரா-இரப்பர் பூராவும் டன்லப் கம்பெனிக்குக் கொடுக்கப்படுகிறது. அது சாதாரணமாக வெளியில் விற்கின்ற விலையை